நாவாந்துறை படிப்பகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

16.11.2016 - மலர் 13, இதழ் 38



## புதுப்பிக்கப்பட்டுள்ள 7 அதிசயங்கள்




## வொண்டர் வுமனுக்கு ஐ.நா.வின் கௌரவ தூதுவர் பதவி



## தீப்பிடிக்காத மரம்



## மூளைக்கு வேலை

விலை ரூபா 15/-

## மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப்பிடிக்காத மரம்



மரங்களுக்குத் தீ வைத்தால் அவை கருகி அழிந்துவிடும். ஆனால், தீப்பிடிக்காத தன்மை கொண்ட மரங்களும் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் 'ரொடோடென்ரன்' (Rhododendran) என்றழைக்கப்படும் காட்டுப் பூவரசு மரம். இந்த மரத்திற்கு தீ வைத்தால், பல அடுக்குகளாக அமைந்துள்ள அதன் பட்டைகளிலிருந்து நீர் வடியத் தொடங்கி விடும். இதனால், இந்த மரம் தீப்பிடிக்காமல் அப்படியே இருக்கும்.

மலைப்பாங்கான இடங்களில் வளரும் இந்த மரங்கள் பெரும்பாலான பறவைகளின் வாசஸ்தலமாகவும் விளங்குகின்றன. பலத்த காற்றையும் தாங்கக்கூடியளவுக்கு காட்டுப் பூவரசு மரங்கள் உறுதிமிக்கவை. இம்மரத்தில் பூக்கும் செந்நிற மலர்களிலிருந்து தயாரிக்கப்படும் சாறு மருத்துவக் குணம் கொண்டது.

இலங்கை உட்பட; இந்தியா, நேபாளம், மியன்மார், சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளிலும் காட்டுப் பூவரசு மரங்கள் காணப்படுகின்றன.

# சாரதி இல்லாத கார்

வாகன உலகின் அற்புதமானதொரு தயாரிப்பாகவே சாரதி இல்லாமல் ஓடும் கார்கள் (Driverless Cars) கருதப்படுகின்றன. சாரதி இன்றி இயங்கிச் செல்லும் வாகனங்கள் குறித்து உலகின் பல நாடுகளும் முயற்சித்து வருகின்றன. அத்தகைய முயற்சிகளில் ஒன்றே இன்றளவில் வெற்றியளித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.





சாரதியில்லாமல் பயணிக்கக்கூடிய இந்த காரை பிரித்தானியாவின் ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தின் மொபைல் ரொபோடிக்ஸ் (Mobile Robotics) பிரிவு பரிசித்துப்பார்த்துள்ளது. இந்த மோட்டார் காரிற்கு 'Oxbotica' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த காரில் இருவர் மாத்திரமே பயணிக்க முடியும். பயணிகளின் பாதுகாப்புக் குறித்து சிறந்த உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டளவில் இந்த மோட்டார் காரை சந்தைப்படுத்த எதிர்பார்த்துள்ளனர்.

# ஆதி மனிதனுக்கும் புற்றுநோய் இருந்துள்ளது!





தென் ஆபிரிக்காவின் ஸ்வர்ட்கார்ன்ஸ் பிரதேசத்தில் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின்போது, ஓர் எலும்புத் துண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அந்த எலும்புத் துண்டை ஆராய்ந்ததில், அது புற்றுநோய்த் தாக்கத்திற்கு உட்பட்டுள்ள எலும்புத் துண்டென தெரியவந்துள்ளது. புற்றுநோய்த் தாக்கத்திற்கு உள்ளான ஆதி மனிதனின் எலும்புத் துண்டு கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவன்று. இதற்கு முன்னரும் இத்தகைய எலும்பொன்று கண்டுபிடிக்கப்பட்டது. அந்த எலும்புத் துண்டு 120,000 வருடங்கள் பழமை வாய்ந்ததென்றும், அது நியண்டர்தால் மனிதனுக்குரியதென்றும் பின்னர் தெரியவந்தது.

எனினும், அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எலும்புத் துண்டானது, பழைய சாதனையை முறியடித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அதன்படி, இந்த எலும்புத் துண்டு 1.7 மில்லியன் வருடங்கள் பழமையானது என ஆய்வுகளின்மூலம் தெரியவந்துள்ளது. குறித்த எலும்புத் துண்டானது, பாதத்தின் ஒரு பகுதியாகும் என்றும் அது எந்த வயதினை உடைய நபருக்குரியது என்பது இன்னும் கண்டறியப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது. இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள சான்றுகளின்படி, இது ஹோமோ இர்கெஸ்டர் அல்லது பரன்த்ரோபஸ் ரொபஸ்டஸ் மனிதனுக்குரியதாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

# புலமைப்பரிசில் சித்தியடைந்தோர் விபரம்

2016, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களைப் பிரசுரிக்க 'விஜய்' பத்திரிகை தயாராக உள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை...**

★ சித்தியடைந்த மாணவரின் புகைப்படத்துடன், பெற்ற புள்ளிகள், பாடசாலை, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் என்பனவற்றை ஒரு தாளில் தெளிவாக எழுதி, பெற்றோர் கையொப்பம், பாடசாலை அதிபரின் கையொப்பம் மற்றும் அத்தாட்சி முத்திரையையும் பதித்து, புள்ளிகளைக் காட்டும் அத்தாட்சிப் பிரதியுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

★ குழுப்படம் அனுப்புபவர்களாயின், மீண்டும் தனிப்படம் அனுப்புவதை தவிர்க்கவும்.

★ ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி: 2016 நொவெம்பர் 30.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

புலமைப்பரிசில் சித்தியடைந்தோர் 2016,
'விஜய்'
த.பெ.எண் 2037, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வொண்டர் வுமனுக்கு ஐ.நா.வின் கௌரவ தூதுவர் பதவி





லிண்டா காட்டர் மற்றும் கேல் கெடொட் ஆகியோர் ஐ. நா.வின் வொண்டர் வுமன் கௌரவ தூதுவர் பதவி வழங்கும் விழாவில் கலந்துகொண்டபோது...



சூப்பர்மேன், பெட்மேன் கதாபாத்திரங்கள் போலவே, DC Entertainment சித்திரக் கதை தயாரிப்பாளர்களால் உருவாக்கப்பட்ட வீராங்கனை கதாபாத்திரம் தான் 'வொண்டர் வுமன்' ஆகும். பெண்களின் உரிமைகளுக்காக முன்நிற்கின்ற, பெண்களின் பலம் மற்றும் துணிவு என்பனவற்றை வெளிக்காட்டும் வகையில் உருவாக்கப்பட்டதுதான் வொண்டர் வுமன் எனும் கதாபாத்திரம். இந்த கதாபாத்திரத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை கௌரவ தூதுவர் பதவியை உத்தியோகபூர்வமாக வழங்கியுள்ளது.

பெண்களுக்கு எதிராக நிகழும் அநீதிகள், பாகுபாடுகள் மற்றும் பெண்களை கொடுமைப் படுத்துதல் என்பவற்றுக்கு எதிராக உலகளாவிய ரீதியில் பெண்களை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையிலேயே வொண்டர் வுமன் கதாபாத்திரத்திற்கு கௌரவ தூதுவர் பதவியை வழங்கி கௌரவிப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.






அந்தவகையில், பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுவூட்டுவதற்காகவே ஐக்கிய நாடுகளின் கௌரவ தூதுவராக வொண்டர் வுமன் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. கடந்த ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி இந்த தூதுவர் பதவி வழங்கப்பட்டது. அன்றைய தினம் வொண்டர் வுமன் கதாபாத்திரம் தனது 75 ஆவது வருட நிறைவைக் கொண்டாடியது. வொண்டர் வுமன் சித்திரக் கதாபாத்திரமானது, 1941 ஆம் ஆண்டு உருவாக்கப் பட்டது.

## வொண்டர் வுமன் நடிகைகள்

1975 தொடக்கம் 1979 வரை வொண்டர் வுமனின் வீரசாகசங்கள் அடங்கிய தொலைக்காட்சித் தொடர் ஒளிபரப்பப் பட்டது. அப்போது வொண்டர் வுமன் கதாபாத்திரமேற்று நடித்தவர் லிண்டா காட்டர் ஆவார். அண்மையில் வெளியான Batman v Superman: Dawn of Justice திரைப்படத்தினூடாக மீண்டும் வொண்டர் வுமன் கதாபாத்திரம் ஹொலிவூட் வெள்ளித் திரைக்கு வந்துள்ளது. இந்த புதிய திரைப்படத்தில் வொண்டர் வுமன் கதாபாத்திரமேற்று நடிப்பவர் நடிகை கேல் கெடொட் ஆவார். இவரது நடிப்பிலான 'வொண்டர் வுமன்' எனும் திரைப்படம் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு திரையிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஆரம்பகால வொண்டர் வுமன் கதாபாத்திரத்தில் நடித்த லிண்டா காட்டரும் அண்மைய காலத்தில் வொண்டர் வுமன் கதாபாத்திரத்தில் நடித்துள்ள கேல் கெடொட்டும் ஐ.நா.வின் வொண்டர் வுமன் கௌரவ தூதுவர் பதவி வழங்கும் விழாவில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

- இரஞ்சித் ஜெயகர்

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652




# செய்தியாளர்கள் தேவை

பாடசாலை மற்றும் கல்வித்துறை சார்ந்த செய்திகளை அனுப்பக்கூடிய பிராந்திய செய்தியாளர்கள் தேவை. ஆர்வமுடையோர் தமது முகவரியை அத்தாட்சிப்படுத்தி முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

பிராந்திய செய்தியாளர்,
விஜய்,
த.பெ.இல. 2037,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீக்ரட் சிக்ஸ் இரகசிய குழு...

09

தொடர்கதை...

ஜே.விபாகர்

**"சரி வா நாங்கள் மேலே போவோம். சும்மா ஆட்களிடம் விசாரித்துச் சரி வராது. நேரடியாகப் போய் பார்த்துவிட வேண்டியதுதான்?" "வவ்" என்று குறைத்துக்கொண்டே ஹரிஷை பின்தொடர்ந்தது மொன்டி.**



ஹரிஷ் மிகவும் கவனமாக, அவதானத்துடன் மேலே நடந்தான். பாதையில் யாரும் இருக்கவில்லை. கடந்த சில நாட்களாக நடந்த சம்பவங்களின் பின் யாருமே அந்த பாதையை பாவிப்பதில்லை. மேலே செல்லச் செல்ல மரங்களும், செடி கொடிகளும் அடர்த்தியாகின. ஒருவாறு அந்த மாளிகை போன்ற வீட்டின் கேட்டை (படலை) அடைந்தான். அதுவே மிகப் பிரமாண்டமாய் பயமுறுத்துவதாக இருந்தது. நன்றாக பூட்டப்பட்டு சுற்றிவர முள் வேலி அமைக்கப்பட்டு பயங்கரமாக காட்சி கொடுத்தது.

"என்ன செய்றது மொன்டி? உள்ளே போக முடியாதே...!"

ஹரிஷ் 'கேட்' வழியாகவும், முள் வேலி வழியாகவும் எட்டிப் பார்ப்பதைக் கண்ட மொன்டி, தானும் அங்குமிங்கும் அலைந்து தேடியது.

"வவ்... வவ்!"

"என்ன மொன்டி...!?" சத்தம் போடாதே...

மொன்டி திடீரென வேலியைக் கடந்து உள்ளே சென்று, மீண்டும் வந்து காட்டியது. ஹரிஷ் அருகில் சென்று பார்த்தான். அந்த இடத்தில் ஒரு சிறிய உருவம் செல்லுமளவு இடைவெளி இருந்தது. அதன் உள்ளே மொன்டியையும் அழைத்துக் கொண்டு ஹரிஷ் உள்ளே நுழைந்தான்.

உள்ளே பெரிய தோட்டம், பூங்காவைப்போல், மரங்கள், பூஞ்செடிகள் இவற்றைக் கடந்து கொஞ்சத் தூரத்தில் அந்த மாளிகை தெரிந்தது. மாளிகை என்று அம்மா சொன்னது சரிதான். அந்த மாளிகை பெரிதாக அழகாகக் கட்டப்பட்டிருந்தது. ஆனால், இனம்புரியாத மர்மம் அந்த மாளிகையை சூழ்ந்திருந்தது. ஹரிஷ் ஒவ்வொரு அடியையும் கவனமாக எடுத்து வைத்தான். மொன்டி ஒவ்வொரு பொருளையும், செடியையும் மோப்பம் பிடித்துக்கொண்டிருந்தது.

"மொன்டி ஸ்டொப்!"

கொஞ்சம் திடுக்கிட்ட மொன்டி அப்படியே நின்றது. ஹரிஷ் அதன் அருகில் சென்றான்.

"இங்கே பார்த்தாயா...!? நூல்... இது அப்படியே வீட்டுக்குள் போகுது இதை மிதித்தால் அல்லது தட்டினால் உள்ளே எலார்ம் (Alarm) அடிக்கும் என்று நினைக்கிறேன். எனக்கென்னவோ இது சரியாகத் தெரியவில்லை" ஹரிஷ் முழங்காலிட்டு அதை பரிசோதித்த வாறே மேலே அண்ணார்ந்து வீட்டைப் பார்த்தான். எல்லா ஜன்னல்களும் அடைக்கப்பட்டு, உள்ளே திரையால் மூடப் பட்டு இருந்தன. ஒரே... ஒரு ஜன்னலில் மட்டும்...!! ஹரிஷ் அதிர்ந்தான். இதயம் ஒருகணம் துடிக்க மறந்தது. மொன்டியை இறுகப் பிடித்துக் கொண்டான். பயத்தில் 'பக் பக்' என்று இதயம் அடித்துக்கொண்டது. அந்த ஒரு ஜன்னலில் மட்டும் ஒரு சிறிய உருவம் உள்ளே நின்று அவனைப் பார்த்துக் கொண்டிருந்தது.

ஹரிஷ் அதைப் பார்த்துக் கொண்டிருக்க, திடீரென பின்னாலிருந்து ஒரு பயங்கரச் சத்தம் கேட்டது. ஹரிஷ் திரும்பினான். அந்த சத்தம் கூடியது. காதை மூடிக் கொண்டான். மொன்டியால் அதைத் தாங்க முடியவில்லை. இரண்டு தடவைகள் குரைத்து விட்டு அப்பால் விலகி ஓடியது. ஹரிஷ் சத்தம் வரும் இடத்தைப் பார்த்துக் கொண்டிருக்க, அந்த உருவம் வெளிப்பட்டது. சிறார்கள் பார்த்ததாகச் சொன்ன அதே உருவம். மூன்றடி உயரம், உணரிகள், பச்சை நிறம். சத்தம் அதிலிருந்துதான் வந்தது.

"மொன்டி... மொன்டி..."

என்று கத்திக்கொண்டு தட்டுத்தடுமாறி ஓடினான். ஹரிஷ் பின்னால் காலடி ஓசைகள் கேட்டன. திடீரென ஒரு பாரிய உருவம் அவனை கீழே வீழ்த்தியது. அவன் முகத்தை தரையோடு அழுத்திப் பிடித்துக் கொண்டது. அவனால் அசைய முடியவில்லை. ஒரு விநோத வாசனை அடிக்கவே அவன் அப்படியே மயங்கிப் போனான்.

(தொடரும்)

# தற்பெருமை கூடாது

நீர்நிலை ஒன்றில் நிறையத் தவளைகள் இன்பமாக வாழ்ந்து வந்தன. ஒருநாள் இளம் தவளைகள் விளையாடிக் கொண்டிருந்தபோது, அவர்களைக் கடந்து ஒரு பெரிய ஆமை சென்றது. அதனைக் கண்ட இளம் தவளைகளில் ஒன்று "இந்த ஆமையைப் பார்க்கும்போது, எனக்கு மிகவும் பொறாமையாக இருக்கிறது. நாம் இவ்வாறு சிறிய உயிரினமாக இருப்பதால்தான் நமக்கு எந்தவிதமான மதிப்பும் மரியாதையும் இல்லை. இதனை மாற்ற வேண்டும் எனின் நாமெல்லாம் முயற்சித்து அந்த ஆமை அளவிற்கு உருவத்தைப் பெரிதாக்க வேண்டும்" என்று கூறியது.

அந்தத் தவளையின் கூற்றில் நியாயம் இருப்பதாக ஒரிரு தவளைகள் ஆமோதித்தன. இதனைக் கேட்ட வயதான தவளை ஒன்று "நமக்கென்று தனித்திறமை உண்டு. அதனால், பிறரைக் கண்டு நாம் பொறாமைப்படக் கூடாது; அதனால் ஆபத்து நமக்கே" என்று அறிவுரை கூறியது.

"தாத்தா உங்களால் ஒரு காரியம் முடியாது என்றால் மற்றவர்களாலும் முடியாது என்று எண்ணிவிடாதீர்கள். இதோ, பாருங்கள். மூச்சை அடக்கி என் உருவத்தைப் பெரிதாக்கிக் காண்பிக்கிறேன்" என்று கூறிக்கொண்டே மூச்சை உள் இழுத்து உடலை பெரிதாக்கியது. ஓரளவுக்கு உடல் பெரிதானதும், ஏனைய தவளைகளை அது பார்த்தது. அவை ஆமையின் அளவுக்கு உடல் பெரிதாகவில்லை என்றன. மேலும், மூச்சை உள் இழுத்து அந்த தவளை உடலை பெரிதாக்க முயற்சித்தது. அப்போது அதிக காற்று உள்ளிழுக்கப்பட்டதால் அதன் தோல் கிழிந்து காயங்கள் ஏற்பட்டது. இதனைக் கண்ட மற்றத் தவளைகள் கவலையுற்றதோடு, முயற்சியை கைவிடுமாறு மன்றாடின.



அதனால், முயற்சியை கைவிட்ட தவளை காயங்களால் அவதியுற்றது. இதன்போது வயதான தவளை அதனை நோக்கி "எதற்கெடுத்தாலும் மற்றவர்களைப் போல் என்னால் முடியும் எனும் தற்பெருமை கொள்வது தவறு. அவரவர்க்கென திறமைகள் உண்டு அதன் வழி முயற்சிப்பதே சிறப்பு" எனக் கூறியது. இதனைக் கேட்ட இளம் தவளைகள் வயதான தவளையிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, இன்பமாக விளையாடச் சென்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகில் புதுப்பிக்கப்பட்டுள்ள 7 உலக அதிசயங்கள்

உலகில் பல்வேறுபட்ட படைப்புகளில் ஏழு அற்புத படைப்புகளை 'நவீன உலக அதிசயங்களின் கழகம்' எனும் சுவிட்ஸர்லாந்து அமைப்பு தெரிவுசெய்துள்ளது. மக்களின் அபிப்பிராயங்களின் அடிப்படையிலேயே இத்தெரிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு முன்னின்று செயல்பட்டவர் இந்த அமைப்பின் தலைவரான பேர்னாட் வெபர் என்பவராவார். இந்த ஏழு அதிசயங்களும் 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் திகதி (07-07-07) போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பன் நகரில் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





## ச்சிச்சென் இட்சா தொல்பொருள் பூமி

'ச்சிச்சென் இட்சா' என்பது பூர்வீக கொலம்பிய தொல்லியல் விஞ்ஞான பூமியாகும். மாயன் கலாசாரத்தின் மகிமையை பறைசாற்றும் மாபெரும் பிரமிட்டுக்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த பிரதேசம் மெக்ஸிகோ நாட்டில் அமைந்துள்ளது. இவ்விடம் மாயன்களின் சமய வழிபாட்டு மையமாக விளங்கியதற்கான சான்றுகளை நாம் இன்றும் காணலாம்.

## ரியோ டி ஜெனைரோ நகர இயேசுகிறிஸ்து

இந்த மாபெரும் இயேசுகிறிஸ்துவின் சிலையானது, பிறேசிலின் ரியோ டி ஜெனைரோ நகரத்திற்கு அண்மையில் அமைந்துள்ள மலையின் உச்சியில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் நிறை 635 தொன்கள் ஆகும். இந்த சிலை 'இரட்சகர் இயேசுகிறிஸ்து' என அழைக்கப்படுகின்றது.





## சீனப் பெருஞ்சுவர்

சீனப் பேரரசுக்கு வட திசையில் ஏற்படும் எதிரிகளின் தாக்குதல்களை தவிர்ப்பதற்காக நிர்மாணிக்கப்பட்டதே சீனப் பெருஞ்சுவராகும். இது ஷெங்கைகுவானில் இருந்து லொப்நூர் வரை 21,196 கிலோ மீற்றர் வரை நீண்டு செல்கின்றது. இப்பெருஞ் சுவரைக் கட்டும் பணிகள் ஐந்தாம் நூற்றாண்டில் ஆரம்பமாகியது.

## கொலோசியம் அரங்கு

ரோமப் பேரரசர்கள் கட்டிய கட்டடங்களிலேயே மிகப் பெரியது கொலோசியம் அரங்காகும். இது இத்தாலியின் ரோம் நகரில் அமைந்துள்ளது. கி.பி 72 ஆம் ஆண்டுகளில் இந்த அரங்கம் மன்னர் வெஸ்பசியனால் கட்டப்பட்டது. இங்கு ஒரே நேரத்தில் 50,000 பேர் அமர்ந்து காட்சிகளை இரசிக்கும் வசதிகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாச்சு பீச்சு சிதைவடைந்த நகரம்

மாச்சு பீச்சு என்பது இன்கா நாகரிக மக்களின் மகிமையை உலகிற்கு உணர்த்தும் சிதைவடைந்த நகரமாகும். இது கடல் மட்டத்தில் இருந்து 2400 மீற்றர் உயரத்தில் பேரு நாட்டில் 'உருபம்பா' எனும் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. இந்த நகரத்தை அமெரிக்க வரலாற்று நிபுணரான ஹிராம் பின்கம் அவர்கள் 1911 ஆம் ஆண்டளவில் கண்டுபிடித்திருந்தார்.




## தாஜ்மஹால்

இந்தியாவில் ஆக்ரா நகரில் உள்ள யமுனை நதிக்கரையில் வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட தாஜ்மஹால் ஆனது முகலாய மன்னரான ஷாஜஹானின் அன்பு மனைவியான மும்தாஜ்ஜின் நினைவாக கட்டிய நினைவுச் சின்னம் ஆகும். இந்த கட்டடம் முகலாய சாம்ராச்சியத்தின் மகிமையை பறைசாற்றுகின்றது. இதன் கட்டடப் பணிகள் 1631 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டன.

## பெட்ரா கற்சிற்பம்

ஜோர்தானில் 'எருபாஹி ஹோர்' எனும் மலைப்பிரதேசத்தில் அழகிய இளஞ்சிவப்பு நிறம் கலந்த கற்சிற்பம் நிறைந்த கட்டடத்தையே 'பெட்ரா' எனும் பெயரில் அழைக்கின்றனர். இக்கட்டடம் 1812 ஆம் ஆண்டு சுவிட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த நாடுகாண் பயணியான ஜோன் லுட்விக் பர்க்ஹாட் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.






(-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதாவாக்



**இலங்கை வரலாற்றில் 71 வருடங்களாக ஓர் இராசதானியாக விளங்கிய சீதாவாக்கை இராசதானி எழுச்சி பெற்ற விதமும் வீழ்ச்சிக்கு காரணமான விபரங்களையும் இங்கு நோக்குவோம்.**

## இராசதானியின் தோற்றம்

*7* ஆம் விஜயபாகுவின் புதல்வர்களாகிய புவனேக பாகு, மாயாதுன்னை, றைகம் பண்டார என அழைக்கப் பட்ட மத்தும பண்டார ஆகியோர் கோட்டை இராச்சி யத்தை மூன்றாகப் பிரித்து முறையே புவனேகபாகு கோட்டையையும் மாயாதுன்னை சீதாவாக்கை யையும் றைகம பிரதேசத்தை றைகம பண்டாரவும் ஆட்சி செய்தார்கள். இவ்வாறே, இலங்கை வரலாற்றில் சீதாவாக்கை எனும் புதிய இராசதானி உதயமாகியது.



## சீதாவாக்கையின் எழுச்சி

சீதாவாக்கை இராச்சியத்தில் ஆட்சிபீடம் ஏறிய மாயாதுன்னை புவனேகபாகுவை விட சிறந்த செயல்திறன் கொண்ட மன்னனாகத் திகழ்ந்தான்.

கோட்டை இராச்சியத்தில் போர்த்துக்கேயரின் ஆதிக்கம் வலுவடைந்து வந்த காரணத்தால் ஆரம்பம் முதலே மாயாதுன்னை போர்த் துக்கேயருக்கு எதிரான கொள்கையைக் கடைப் பிடித்தான். *1527* முதல் *1539* வரை மாயா துன்னை கோட்டை இராச்சியத்தின் மீது பல தடவைகள் படையெடுத் தான். எனினும், கோட்டை மன்னன் புவனேகபாகு விற்கு போர்த்துக்கேயர் வழங்கிய படை உதவி களால் மாயாதுன்னையின் முயற்சி வீணானது. ஆனால், *1539* ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரின் உதவியு டன் கோட்டை படையினர் சீதாவாக்கையினுள் புகுந்தவு டன் மாயாதுன்னை அவர்களுடன் சமாதானம் செய்துகொண்டான்.


*1538* இல் மாயாதுன்னை யின் மற்றொரு சகோதர னாகிய றைகம ஆட்சியாள னான றைகம் பண்டார மரண மடைந்தான். அதனைத் தொடர்ந்து அவன் ஆண்ட றைகம இராச்சியத்தையும் மாயாதுன்னை தன்னுடைய இராச்சியத்தோடு சேர்த்துக் கொண்டமையால் சீதாவாக்கை மேலும் பலமுற் றது. இருப்பினும் திருப்திய டையாத மாயாதுன்னை புவனேகபாகுவின் கோட்டை இராச்சியத்தையும் கைப்பற்ற முயற்சித்தான்.

*1550* ஆம் ஆண்டில் புவனேகபாகு கொல்லப்பட் டான். இச்சந்தர்ப்பத்தில் மாயாதுன்னை கோட்டை இராச்சியத்தை ஆள முயற் சித்தபோது, புவனேகபாகு வின் பேரனான தர்மபாலனே அரசாள வேண்டுமென புவனேகபாகு செய்து வைத் திருந்த ஏற்பாட்டை அலட்சி யம் செய்த மாயாதுன்னை போர்த்துக்கேயருடன் நட்புக் கொண்டு இராசப்பிரதிநிதியாக இருந்த விதிய பண்டாரனுக் கெதிராக போர்த்தொடுத்து அவனை தோற்கடித்தான். கடுமையாகத் தாக்கப்பட்ட விதிய பண்டாரன் தனது பொக்கிஷங்களோடு யாழ்ப்பாண மன்னன் சங்கி லியிடம் அடைக்கலம் புகுந் தான். விதிய பண்டாரனுக்கு சங்கிலி அடைக்கலம் கொடுத்து பாதுகாத்தமை சங்கிலி மீதான போர்த்துக்கேயரின் வெறுப்பை மேலும் அதிகரிக்கச் செய்தது. ஆனால், சிறிது காலத்தில் விதிய பண்டார இறந்தமை யானது, மாயாதுன்னைக்கு கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்ற இலகுவாக்கியது.

*1557* ஆம் ஆண்டில் தர்மபாலன் கத்தோலிக்க சமயத்தை தழுவி தனது பெயரை தொன் ஜுவான் தர்மபாலன் என மாற்றிக் கொண்டான். அதன்பின்னர் கோட்டை இராச்சியத்தில் கத்தோலிக்க சமயம் பரவ அனுமதித்தமையும்



கோட்டை மக்களுக்கு போர்த்துக்கேய ரால் விளைந்த அநீதிகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை, மற்றும் தர்மபாலவின் மதமாற்றம் போன்ற காரணங் களால் தர்மபாலன் மக்களின் ஆதரவை இழந்தான். இதனால், புத்தபெருமானின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த (சா/த) பாடத்திட்டத்திற்கு உட்பட்டது



# கை இராசதானி [1521-1592]

புனித சின்னத்தை சீதாவாக்கைக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. மேற்கூறிய நிலைமைகளினால் மக்களில் அநேகர் மாயாதுன்னையின் பக்கம் சார்ந்தனர். மாயாதுன்னையும் புத்தசமயத்தைப் பாதுகாக்கும் சிங்கள மன்னனாகக் கருதப்பட்டான்.

## முல்லேரியா யுத்தம்

1555 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சிய மன்னனாகிய சங்கிலியுடன் போர்த்துக்கேயர் கடும் யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் பொழுது மாயாதுன்னையும் அவனது மகனான இராசசிங்கலும் மீண்டும் கோட்டை நகரைத் தாக்கினர். எனினும், போர்த்துக்கேயரின் பீரங்கித் தாக்குதலால் மாயாதுன்னையின் படையினரால் நகரின் உள்ளே செல்ல முடியவில்லை.

1559 ஆம் ஆண்டு இராசசிங்கன் பெருஞ்சேனையுடன் கொழும்பையும் கோட்டையையும், ஒரே சமயத்தில் தாக்கும் நோக்குடன் வழியில் 'முல்லேரியா' என்ற இடத்தில் முகாமிட்டு இருந்தான். இதனையறிந்த போர்த்துக்கேயர் இரு நகரங்களையும் பலப்படுத்தி இராசசிங்கனை எதிர்கொண்டனர். இராசசிங்கன் மதியூகமாக போர்த்துக்கேயச் சேனையை நாலா பக்கங்களிலும் சூழ்ந்து போர்த்துக்கேயருடன் போர் செய்தான். இதனால், இப் போரில் போர்த்துக்கேயர் படுதோல்வி அடைந்தனர். சுமார் 1600 போர்த்துக்கேயர் இறந்து போக, மேலும் 125 போர் வீரர்கள் கொழும்புக்குத் தப்பியோடினர். இதனை சாதகமாகப் பயன்படுத்திய இராசசிங்கன் கோட்டை நகரத்தை முற்றுகையிட்டு நாலாபக்கமும் தன் சேனையுடன் சூழ்ந்துகொண்டான். இதனையறிந்த நகரவாசிகள் இராசசிங்கன் பக்கம் ஓடினர். அதனால், போர்த்துக்கேயர் கோட்டையை கைவிட்டு தர்மபாலனையும் அரண்மனையில் உள்ள பிரபுக்களையும் அழைத்துக்கொண்டு கொழும்புக்குச் சென்றனர்.

கோட்டை இராசதானியை போர்த்துக்கேயரும் தர்மபாலனும் கைவிட்டமை மாயாதுன்னையின் வெற்றிக்கு அறிகுறியாகியது. கொழும்பைத் தவிர்த்து கோட்டை இராச்சியத்தின் ஏனைய பகுதிகள் சீதாவாக்கை இராச்சியத்தின்கீழ் வந்தமையால் மேலும் பலம் பெற்றது. கொழும்பைக் கைப்பற்றினால் முழுக் கோட்டை இராச்சியமும் தன்வசம் வரும் என எண்ணிய மாயாதுன்னை 1579 ஆம் ஆண்டில் பெருஞ்சேனையுடன் கொழும்பைத் தாக்கினான். இருப்பினும், மாயாதுன்னை மன்னனால் கொழும்பைக் கைப்பற்ற முடியவில்லை.

## 1 ஆம் இராசசிங்கன்


மாயாதுன்னை 1581 ஆம் ஆண்டில் காலமானான். அதன்பின்னர் அவனது மகனாகிய இராசசிங்கன் முதலாம் இராசசிங்கன் என்ற பெயரில் சிம்மாசனம் ஏறினான். சீதாவாக்கை இராச்சியத்திற்கு அரசனானவுடனேயே, இலங்கை முழுவதற்கும் தானே அரசனாக வேண்டுமென தனது தந்தைபோல எண்ணினான்.

கொழும்பை இலகுவில் வெற்றிகொள்ள முடியாதென்பதை உணர்ந்து கண்டி இராச்சியம் மீது கவனம் செலுத்தினான். அக்காலத்தில் கண்டி இராச்சியத்தை கரலியட்ட பண்டார என்பவன் ஆட்சி செய்தான். இராசசிங்கன் கண்டியரசனின் பிரதானிகளில் ஒருவனாகிய வீரசுந்தர பண்டாரனின் உதவியோடு பெருஞ்சேனையைத் திரட்டி கண்டியரசனுடைய படையைத் தோற்கடித்து கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றினான். இதனால், 1 ஆம் இராசசிங்கன் சீதாவாக்கை, இராச்சியத்தோடு கண்டி இராச்சியத்தை ஆளத் தொடங்கினான்.

ஆனால், யாழ்ப்பாண இராச்சியம், கொழும்பு நகரம் ஆகிய இரு நகரங்களையும் இறுதிவரை 1 ஆம் இராசசிங்கனால் கைப்பற்ற முடியவில்லை.

சீதாவாக்கையின் வீழ்ச்சி

1587 ஆம் ஆண்டில் கொழும்பைக் கைப்பற்றவும் போர்த்துக்கேயரை இலங்கையில் இருந்து முற்றாகத் துரத்தவும் திட்டமிட்டு பெருஞ்சேனையுடன் 1 ஆம் இராசசிங்கன் கொழும்பைத் தாக்கினான்.





இதன்போது, கொழும்பு நகரில் 350 போர்த்துக்கேயப் போர்வீரர்களே இருந்தனர். இதனால், கோவாவில் இருந்து படை உதவியைப் பெற்ற போர்த்துக்கேயர் இராசசிங்கனை பின்வாங்கச் செய்தனர்.

கொழும்பில் சந்தித்த தோல்வியின் காரணமாக, வெறுப்படைந்த 1 ஆம் இராசசிங்கன் தனது மக்களை ஈவிரக்கமின்றி துன்புறுத்தினான். 1 ஆம் இராசசிங்கனின் பிரதம ஆலோசகனாக விளங்கிய அரிட்ட கீவெண்டு

(தொடர்ச்சி 23 ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல்

பெயர்: ................................................

O1) வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

O1. கிருமிநாசினிகள் உபயோகிக்கும்போது விபத்துகளில் இருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள செய்ய வேண்டியது யாது?

1. தலைக்கவசம் அணிதல்
2. கையுறை அணிதல்
3. கை, கால், முகத்தை மறைத்தல்

O2. ஒரு பொருளை விற்பனை செய்யும்போது, விளம்பரம் செய்யும் பிரதான முறை அல்லாதது எது?

1. வானொலி 2. தொலைக்காட்சி
3. வாய்மூலம்

O3. பின்வருவனவற்றுள் கசப்புச் சுவையுள்ள இலை எது?

1. புளி 2. குறிஞ்சா 3. பசளி

O4. ஆண்பூவும் பெண்பூவும் தனித்தனியாக காணப்படும் தாவரம்;

1. பப்பாசி 2. ரோஜா 3. தோடை

O5. சூழலுக்கேற்ப உடலின் நிறத்தை மாற்றும் பிராணி;

1. ஓணான் 2. நிறப் பாம்பு 3. பச்சோந்தி

O6. வித்துக்களை நீக்கிய பின் உணவாகப் பயன்படுத்தும் உணவு வகைகள்;

1. வட்டக்கத்தரி, பப்பாசி
2. சோளம், அன்னாசி 3. நெல், மாங்காய்

O7. ஆபத்தை உணர்ந்தவுடன் வாலைச் சிலிர்த்துப் பயம் காட்டும் பிராணி;

1. அணில் 2. முள்ளம்பன்றி 3. நாய்

O8. மிக வேகமாக ஓடக்கூடிய விலங்கு எது?

1. சிங்கம் 2. சிறுத்தை 3. முயல்

O9. இரவுவேளையில் மாத்திரம் உணவுதேடி உண்ணும் பிராணி எது?

1. எலி 2. நத்தை 3. வௌவால்

10. மரங்களில் உள்ள இயற்கையான பொந்துகளில் வாழும் பிராணி எது?

1. குரங்கு 2. தேன்குருவி 3. ஆந்தை

11. இலங்கைவாழ் சகல இன மக்களும் ஒன்றிணைந்து கொண்டாடும் தேசிய விழா எது?

1. புத்தாண்டு 2. சுதந்திரதின விழா 3. வெசாக்




12. கம்பிகளை வளைக்கவும் வெட்டவும் பற்றிப்பிடிக்கவும் உதவும் உபகரணம் எது?

1. குறடு 2. சுத்தியல் 3. பாக்குவெட்டி

13. பித்தளைப் பாத்திரங்களை மினுக்கி கழுவுவதற்கு மிகவும் பொருத்தமான பதார்த்தம் எது?

1. சாம்பல் 2. தேயிலைச் சக்கை 3. பழப்புளி

14. பினாட்டு என்னும் உணவுப் பொருள் எப்பதார்த்தத்தில் இருந்து தயாரிக்கப்படுகின்றது?

1. தென்னை 2. விளாம்பழம் 3. பனம்பழம்

15. கிராமிய விளையாட்டாக அமையாதது எது?

1. சதுரங்கம் 2. சில்லுக்கோடு
3. பசுவும் புலியும்

O2) சரியான சொல்லைத் தெரிந்து இடைவெளி நிரப்புக.

வெசாக், சித்திரைப் புத்தாண்டு, தமிழ்மொழி வாழ்த்து, தேசிய கீதம், பூஞ்சணம், புதிய, சோயா, கௌபி

O1. பௌத்த மக்களின் பண்டிகைகளில் .................................. ஒன்றாகும்.

O2. தமிழ்மொழிப் பாடசாலைகளில் விழாவொன்றின் இறுதியில் .................................. பாடப்படும்.

O3. வீட்டுத்தோட்டத்தில் இருந்து ரசாயனக் கலவை அற்ற .................................. காய்கறிகளைப் பெறலாம்.

O4. பழுதடைந்த தேங்காயில் .................................. காணப்படும்.

O5. உணவில் மாமிச உணவிற்குப் பதிலாக .................................. பயன்படுத்தலாம்.

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

## கணிதம்

(நொவெம்பர் O9 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01) | 01. 3 | 03. 1 | 05. 2 | 07. 2 | 09. 2 |
| | 02. 2 | 04. 3 | 06. 3 | 08. 1 | 10. 3 |

02)
- 01. 24m
- 02. ரூபா 35.00
- 03. 10l 45ml
- 04. ரூபா 150.00
- 05. 4kg 300g
- 06. 8cm
- 07. $\frac{4}{6}$, $\frac{6}{9}$, $\frac{8}{12}$
- 08. 9:00, 3:00

Digitized by Noolaham Foundation.



# மூளைக்கு வேலை

## நான்கு வழிகள்



3

ஒரே மாதிரியான ஐந்து இலக்கங்களைக் கொண்டு 100 யை கணிப்பதற்கான நான்கு வெவ்வேறு வழிகளை செயல்முறைமூலம் நிறுவுக?



## விமானப் பயணம்

1

ஒரு விமானம் புறப்பட்ட இடத்திலிருந்து குறித்த இடத்திற்கு செல்வதற்கு 1 மணி 20 நிமிடங்கள் செலவாகின்றது. ஆனால், அதே இடத்திலிருந்து திரும்பி வருவதற்கு 80 நிமிடங்களே சென்றது. இதனை விளக்குக?



## கடிகாரம்



4 வட்ட வடிவ கடிகாரத்தை பார்த்துள்ளீர்கள்தானே. அதனை மனதில் நினைத்துக்கொள்ளுங்கள். அதை 6 துண்டுகளாகப் பிரிக்க வேண்டும். ஆனால், ஒவ்வொரு துண்டிலும் கிடைக்கும் எண்ணிக்கையின் கூட்டுத்தொகை ஒரே எண்ணில் வரவேண்டும். உங்களுடைய அடிப்படை கணிதத்திறமையை சோதிப்பதற்கான பரீட்சை இது. முயலுங்கள்.


## அன்பளிப்பு



2

இரண்டு அப்பாக்கள் தங்களுடைய மகன்களுக்கு பணப் பரிசு கொடுத்தனர். ஒருவர் தன் மகனுக்கு 150 ரூபாயும், மற்றொருவர் 100 ரூபாயும் கொடுத்தார்கள். இரண்டு மகன்களும் சேர்ந்து தங்கள் கையிருப்பை எண்ணிப் பார்த்தபோது, மொத்தமாக 150 ரூபாயே இருந்தது. இது எப்படி சாத்தியம் ஆகும்?

## வட்டத்துள் சிக்குமா எண்கள்?



5

நண்பர்களே! அருகிலுள்ள படத்தில் ஒன்பது சிறிய வட்டங்கள் உள்ளன. இதில் நீங்கள் ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்களை நிரப்ப வேண்டும். ஒரு எண்ணினை ஒரு முறை மட்டுமே பயன்படுத்த வேண்டும். முடிவில் மூன்று வட்டங்களில் உள்ள எண்களின் கூட்டுத் தொகை பதினைந்தாக இருக்க வேண்டும் முயற்சித்துப் பாருங்கள்.

(விடைகள் 22 ஆம் பக்கம்)

noolaham.org | aavanaham.org

# தாய்லாந்தின் பூம்போல் மன்னன்

தாய்லாந்து நாட்டின் ஒன்பதாவது ராமாவாக அரசாட்சிபுரிந்த பூம்போல் அதுல்யாதேஜ் மன்னன் கடந்த ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி 89 வயதில் காலமானார். உலகில் நீண்ட காலம் சிம்மாசனத்தில் வீற்றிருந்த மன்னர்களில் ஒருவராக இவர் வரலாற்றில் இடம்பெறுகின்றார். 18 ஆம் வயதில் அரசராக பதவி ஏற்ற பின்னர் அவரின் ஆட்சிக்காலத்தில் 10 இராணுவ சதிப்புரட்சியின் நெருக்குதலுக்கு அவர் முகம் கொடுத்தார். எனினும், மன்னன் எல்லா சந்தர்ப்பங்களிலும் மக்களோடு இருந்தமையால் இராணுவம் கூட அவருக்கு சார்பாகவே இருந்தது.





**1927**
டிசெம்பர் 05 ஆம் திகதி ஐக்கிய அமெரிக்காவில் பிறந்தார். தந்தை மஹிதோல் அதுல்யதேஜ் ஓர் இளவரசர். 5 ஆம் ராமா என அழைக்கப்பட்ட ச்சுலலோன்கோர்ன் மன்னன் இவரது பாட்டனார் ஆவார். இவர் வெளிநாட்டில் பிறந்த ஒரே ஒரு அரச வம்சத்தின் உறுப்பினராவார்.



**1932**
பேங்கொக் பாடசாலை ஒன்றில் கல்வி கற்ற பொழுதே, குடும்பத்தோடு சுவிட்ஸர்லாந்திற்கு குடிபெயர்ந்து அங்குள்ள லயுசானே பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றார்.



**1946**
தாய்லாந்தின் மன்னரான ஆனந்த மஹிதோல் மன்னனின் மர்மமான மரணத்தின் பின்னர் புதிய மன்னராக இவர் தெரிவு செய்யப்பட்டார்.



யுத்த பயிற்சியின் போது.



**1950**
ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி சிர்கிட் இளவரசியை திருமணம் செய்துகொண்டார்.



**1950**
மே மாதம் 05 ஆம் திகதி இவரின் முடிசூட்டு விழா உத்தியோகபூர்வமாக நிகழ்ந்தது.



**1956**
அரசியல் விஞ்ஞானம் மற்றும் சட்டக் கல்வியை கற்பதற்காக சுவிட்ஸர்லாந்திற்கு சென்றார்.



**1956**
ஒக்டோபர் 22 ஆம் திகதி முதல் நொவெம்பர் 05 ஆம் திகதி வரை தற்காலிகமாக துறவற வாழ்க்கையை மேற்கொண்டார். அப்போது இவரின் துணைவியே அரசாட்சி புரிந்தார்.

**1957**
மன்னர் பதவியை பாதுகாப்பதற்காக இராணுவ சதிப்புரட்சி ஏற்பட்டது. இருப்பினும், மக்கள் மன்னனுக்கே ஆதரவை நல்கினர்.



**1992**
தாய்லாந்தில் நிலவிய இராணுவ ஆட்சியின் தலைவரையும் ஜனநாயகத் தரப்பினரின் தலைவர்களையும் அரச மாளிகைக்கு அழைத்து இரு பிரிவினரையும் ஐக்கியப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டார்.



அரசியல் ரீதியாக மோதல் நிலைமையில் இருந்த நாட்டில் பகைமை பாராட்டும் தரப்பினரிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக நடுநிலைமை வகித்து செயல்பட்டார்

## இவரின் பிள்ளைகளின் விபரங்கள்



உபோல்ரட்டன ரஜகன்யா இளவரசி



முடிக்குரிய இளவரசர் மஹா வஜிரலொங்கொன்



மஹா ஷக்ரி சிரிந்தோர்ன் இளவரசி



ச்சுலாப்ஹோர்ன் வலைலக் இளவரசி

இவர்களிடையே அடுத்த மன்னனாக மஹா வஜிர லொங்கோன் இளவரசர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

**2006**
ஜுன் மாதத்தில் தாய்லாந்தின் அரசராக முடிசூடிய மணிவிழாவைக் கொண்டாடினார்.





மக்களுடனேயே என்றும் இருந்தார்.

**2009**
இவர் சுவாசத்தொகுதி நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துமவனையில் சேர்க்கப்பட்டார்.



**2010**
தக்ஷின் ஷினவத்ராவின் 'செஞ் சட்டை' ஆதரவாளர்கள் இராணுவ பலத்தில் ஆட்சி புரிவது குறித்து அமைதி காத்தார்.

**2013**
மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது, பித்தப் பை அகற்றும் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

**2014**
ஓகஸ்ட் மாதமளவில் இதய சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

**2016**
ஜுன் 09 ஆம் திகதி பூம்போல் மன்னர் அரசராக முடிசூடிய 70ஆவது வருடம் கொண்டாடப்பட்ட தோடு, மன்னர் நலம் வேண்டி மக்கள் சமய வழிபாட்டிலும் ஈடுபட்டனர்.





**2016**
ஒக்டோபர் 13 ஆம் திகதி நீண்டகாலமாக நிலவிய சுகயீனம் காரணமாக, மரணமானார். ஒருவருடம் முழுவதும் துக்கம் அனுஷ்டிக்கும் வண்ணம் தேசிய துயர காலம் ஆரம்பமாகியது.

### அவர் சந்தித்த உலகத் தலைவர்கள்



இரண்டாம் எலிசபெத் மகாராணியுடன்



ஜப்பானின் ஹீரோஹித்தோ பேரரசருடன்



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுடன்



ரஷ்ய ஜனாதிபதி புட்டின் உடன்.

### 17 ஆம் நூற்றாண்டு முதல் நீண்டகாலம் அரசராக பதவி வகித்தோர்

அரசாட்சி புரிந்த காலம் — பதவி வகிக்கின்றனர் — பதவி வகித்தனர்



72
பிரான்சின் 14 ஆம் லூயி மன்னன்.



71
தாய்லாந்தின் பூமிபோல் மன்னன்.

67
ஒஸ்திரியா ஹங்கேரியாவின் ஃபிரொன்ஸ் ஜோசப் பேரரசன்.



64
ஐக்கிய இராச்சியத்தினதும் பொதுநலவாயத்தினதும் அரசியாகிய இரண்டாம் எலிஸபெத் மகாராணி

63
பிரித்தானியப் பேரரசின் விக்டோரியா அரசி



2011 டிசெம்பரில் தாய்லாந்து அரச மாளிகையில்

62
ஜப்பானின் ஹிரோஹித்தோ பேரரசன்



49
புருணையின் சுல்தான் ஹஸ்ஸனால் பொல்காய்



46
ஓமானின் சுல்தான் பபுஸ் அவர்கள்



44
டென்மார்க்கின் இரண்டாம் மார்கிரட் அவர்கள்




43
சுவீடனின் 16 ஆவது கார்லா குஸ்டஃப் மன்னன்

(-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் உணவு வேளை

மரக்கறி வகைகள்,
பழ வகைகள்,
கீரை வகைகள்
(கூடியளவு)



சோறு, கிழங்கு வகைகள், மாச்சத்துள்ள ஏனைய உணவுகள்

பால் மற்றும் பாலுற்பத்தி உணவுகள்

இனிப்புப் பண்டங்கள்
(மிகக் குறைந்தளவு)

புரதச்சத்துள்ள உணவுகள்
(மீன், இறைச்சி, முட்டை, அவரை வகைகள்)



## சரியான உருவை அமையுங்கள்



## வானவில்



## நிறங்கள் 7

- ★ சிவப்பு
- ★ செம்மஞ்சள்
- ★ மஞ்சள்
- ★ பச்சை
- ★ நீலம்
- ★ கருநீலம்
- ★ ஊதா

- நுஸ்ஜீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1. நான் தரம் ........................ கல்வி கற்கின்றேன்.

2. எனது வகுப்பறையில் ...................... மாணவர்கள் உள்ளனர்.

3. எனது வகுப்பறையிலுள்ள அனைவரும் ஒருவருக்கொருவர் ........................ (சண்டை/உதவி) செய்துகொள்வர்.



4. எனது வகுப்பாசிரியரின் பெயர் ..........................



5. வார நாட்களில் நாம் குழுக்களாகப் பிரிந்து வகுப்பறையை ........................ (அசுத்தம்/பாடம்/சுத்தம்) செய்யும் பணிகளில் ஈடுபடுவோம்.



**1. இந்தக் கடையில் விற்பனைக்கு இருப்பவை;**

1. மரக்கறிகள் 2. புளிக்கும் பழங்கள் 3. பழங்கள்

**2. பெயரிடப்பட்டுள்ள கூடைகளில் இருப்பவற்றின் தமிழ்ப்பதம் தருக.**

..........................................................................




**3. இங்கு தட்டுகளில் வைக்கப்பட்டுள்ளவற்றில் உங்களுக்குத் தெரிந்த பழ வகைகளின் பெயர்களைத் தருக.**

..........................................................................

யாருடைய வீடு?



யாருடைய வீடு?



யாருடைய வீடு?



யாருடைய வீடு?



1. ஜோர்ஜின் வீடு நீல நிறம். ஜோர்ஜிடம் சிவப்பு நிறக் கார் ஒன்றும் உள்ளது.
2. லோராவின் வீடு மஞ்சள் நிறம். வீட்டு முற்றத்தில் டயர் ஊஞ்சலொன்றும் உள்ளது.
3. பாரிய மரமும் நாய்க்கூடும் உள்ள பச்சைநிற வீடுதான் சுபாவின் வீடு.
4. வாகனத் தரிப்பிடம் உள்ள சிவப்பு நிற வீடு மாலியின் வீடாகும்.






1. வட்டத்தினுள் இருப்பவை எவ்வகை எழுத்துக்கள்?

..........................................

2. இவற்றில் ஏதேனும் சில எழுத்துக்களைப் பயன்படுத்தி 4 சொற்கள் அமையுங்கள்.

..................... .....................

..................... .....................

3. இந்த வகைக்குரிய எழுத்துக்களில், வட்டத்தினுள் இல்லாத எழுத்துக்களைக் குறிப்பிடுக.

..........................................

- ஜீநு

noolaham.org | aavanaham.org

## வாழிடங்களுடன் இணைக்க






படங்களுக்கான ஆங்கிலச் சொற்களை இடமிருந்து வலமாக எழுதி, கட்டங்களைப் பூர்த்திசெய்க


1


4

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | |
| | 2 | | | | | | |
| | 3 | | | | | | |
| | 4 | | | | | | |



3



2

## அறிவுக்கு விருந்து (02.11.2016) விடைகள்

red, ham, coat, glove, block, fox

| | | | | | |
|---|---|---|---|---|---|
| d | e | v | o | l | g |
| r | e | d | p | h | k |
| q | c | h | z | j | c |
| p | o | a | a | f | o |
| v | a | m | m | n | l |
| q | t | f | o | x | b |








grapes, apple, pear, orange, plum, kiwi, pineapple, strawberry, bananas

| | | |
|---|---|---|
| apple | orange | strawberry |
| grapes | banana | plum |
| pear | kivi | pineapple |

## சேர்த்தெழுதுக




= --------------




= --------------

## இடைவெளிகளை நிரப்புக

___ 26 27 28 ___

48 ___ 50 ___ 52

___ 34 ___ ___ 37

8 ___ 10 ___ 12

___ ___ 63 ___ 65

## துறுக்கெழுத்துப் போட்டி: 214

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| | 2 | ■ | ■ | | ■ |
| | ■ | 3 | | 4 | ■ |
| 5 | | | | ■ | 6 |
| | ■ | 7 | | | |
| | 8 | ■ | 9 | ■ | |

### மேலிருந்து கீழ்

01. பாம்புக்குப் பகையாகக் கூறப்படும் பிராணி.
02. ஆறில்லா ஊருக்கு அழகு .......... (தலைகீழ்)
03. தொழிலொன்றில் தகைமைகளுக்கு ஏற்ப கிடைப்பது.
04. சில விலங்குகளின் இளையது இவ்வாறு அழைக்கப்படும். (தலைகீழ்)
06. 'செல்வன்' என்பதன் பெண்பால் சொல்.
09. ஆணை. (குழம்பியுள்ளது)

### இடமிருந்து வலம்

01. பணிவு.
02. முல்லைக்குத் தேர் கொடுத்த மன்னன். (மாறியுள்ளது)
03. தோணி.
05. கலப்பு உலோகமொன்று.
07. வெளிச்சத்தால் ஈர்க்கப்படும் பூச்சி வகை.
08. புற்று. (மாறியுள்ளது)


### துறுக்கெழுத்துப் போட்டி: 213 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1ஒ | ணா | ன் | ■ | ■ | 2கா |
| டா | ■ | தே3 | கா4 | ங் | ய் |
| வி | வா5 | ■ | ந் | ■ | ■ |
| ■ | 6ச | ந் | தி | ர | ன் |
| ட | ல் | 7தி | ■ | ■ | ■ |
| 8கூ | ■ | 9பூ | ர | ண | ம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிலாபம் ஓர்து மாவத்தையைச் சேர்ந்த சதானந்தன் - சந்திரிகா தம்பதியரின் செல்வப் புதல்வி சவுந்தரி, தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.



விஜய் விழா உலா
த.பெ. எண் 2037
கொழும்பு

ஒக்டோபர் வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு கல்முனை மஹ்முத் மகளிர் கல்லூரியின் பொது நூலகத்தில் வெளிச்சூழலில் மாணவர்களின் வாசிப்புத் திறன் ஆற்றலினை வளர்க்க, வாசிப்பு மாத நிகழ்வு ஒன்று கல்லூரியின் அதிபர் அமீரா லியாகத் அலி அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து சிறப்பித்ததுடன், பலதரப்பட்ட நூல்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

(தகவல்: நளீம் லதீப்)

# பல்வேறுபட்ட இயல்புகளைக் கொண்ட மீன் இனங்கள்



உலகில் கடல்நீர் மீன் இனம், நன்னீர் மீன் இனம் என இருவகைகள் உண்டு. இவை உலகில் தோன்றி எத்தனை வருடங்கள் ஆகின்றன தெரியுமா...? 50 கோடி வருடங்கள் ஆகின்றன.



★ மீன் இனங்களில் 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வகைகள் உள்ளன.

★ மீன்களுக்கு நுரையீரல் கிடையாது. கன்னத்தில் உள்ள செதில்கள் மூலமே நீரில் உள்ள ஒட்சிசனைப் பிரித்தெடுத்து சுவாசிக்கின்றன.

★ மிகக் கொடிய விசம் கொண்ட மீன் இனங்களும் உள்ளன. இவை ஆழ்கடலின் இருண்ட பகுதியிலேயே வாழ்கின்றன.

★ பஃபர் என்ற மீன் இனம் கடல்நீரை அதிகளவில் குடிப்ப தன்மூலம் பெரும் உரு எடுத்து தனது எதிரியை விரட்டி அடித்து விடுகின்றது.

★ மீன்களுக்கு பிறச் செவிகள் இல்லை. ஆனால், நீரில் ஏற்படும் அதிர்வலைகளை மிகத் துல்லியமாக அறிந்து விடுகின்றன.

★ உலகில் முள்ளந்தண்டுள்ள உயிரினங்களைவிட மீன் இனம் அதிகமாகும்.

★ கோடிக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் மீன்கள் கொடூரமானவையாகவும் மிகப் பெரிய தோற்றத்துடனும் காணப்பட்டன.

★ சூரிய ஒளி புகமுடியாத இருண்ட ஆழ்கடல் பகுதிகளில் இன்னும் கண்டறியப்படாத புதிய பல மீன் இனங்கள் வாழ்கின்றன.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு

க.தனுஸ்சாந்,
யாழ்.இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



பா.அருஸ்ணபவன்,
நு/கோட்லொஜ் தமிழ் வித்தியாலயம், கந்தப்பளை.





பாத்திமா முஸம்மில்,
தெல்தெனிய முஸ்லிம் மகா வித்தியாலயம்,
பலகொல்ல.




சி.சிம்ஹறா,
மகளிர் மகா வித்தியாலயம், மன்னார்.



எம்.கலீஃப்,
குருகுத்தலை முஸ்லிம் மகா வித்தியாலயம்,
குருகுத்தலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2016, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



**பெயர்:** எம்.ஆர்.ஜனா.
**புள்ளிகள்:** 173.
**பாடசாலை:** க/நீரெல்லை முஸ்லிம் வித்., அக்குறனை.



**பெயர்:** சமிக்சா சுந்தரேஷன்.
**புள்ளிகள்:** 169.
**பாடசாலை:** புனித அன்னம்மாள் கல்லூரி, கொழும்பு-13.



**பெயர்:** சுஜிதா சரவணன்.
**புள்ளிகள்:** 155.
**பாடசாலை:** புனித அன்னம்மாள் கல்லூரி, கொழும்பு-13.



**பெயர்:** எப்சிபா செறேனி குனேஷ்.
**புள்ளிகள்:** 168.
**பாடசாலை:** புனித அன்னம்மாள் கல்லூரி, கொழும்பு-13.



**பெயர்:** இரஷிகா லோகநாதன்.
**புள்ளிகள்:** 162.
**பாடசாலை:** இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-06.



**பெயர்:** எம்.என்.சும்ரா.
**புள்ளிகள்:** 165.
**பாடசாலை:** அல்-மினா முஸ்லிம் ம.வித்., பக்மீகொல்ல.



**பெயர்:** எஃப்.ஹம்தா.
**புள்ளிகள்:** 153.
**பாடசாலை:** அல்-மினா முஸ்லிம் ம.வித்., பக்மீகொல்ல.



**பெயர்:** றிமாஸ் அஹமட்.
**புள்ளிகள்:** 170.
**பாடசாலை:** ஜாமியுழ்ழாபிரீன் வித்., காத்தான்குடி.
**பெற்றோர்:** எம்.அஸ்ரப்- ஐ.றிஹானா.

*பலாங்கொடை இ/சீ.சி தமிழ் மகா வித்தியாலய மாணவர்களான எல்.தனுரஷா (152), என். அசானி (164), கே.சுபாசினி (154), எஸ்.டிலக்ஷன் (157), ஆர்.தர்ஷனி (157), ஆர்.பிரியசகி (157), எஸ்.துருஷாந்தினி (162) ஆகியோர் பாடசாலை அதிபர் பி.தம்பிராஜா, உப அதிபர் வி.ரமேஸ்குமார், ஆசிரியர்களான டி.எஸ்.நிஹாரா, எஸ்.யசோதாதேவி ரமேஷ் ஆகியோருடன் காணப்படுகின்றனர்.*



உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
The SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ்Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகனுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

අම්මා: පුතා, මොකද නොණ්ඩි ගහගෙන එන්නේ?
புதா, மொகத நொண்டி கஹகென என்னே?
**அம்மா: மகன், ஏன் நொண்டியடித்துக்கொண்டு வருகிறீர்?**

පුතා: මාව පාසල් පිට්ටනියේ වැටුණා අම්මා.
மாவ பாசல் பிட்டனியே வெடுனா அம்மா.
**மகன்: நான் பாடசாலை மைதானத்தில் விழுந்துவிட்டேன் அம்மா.**

අම්මා: ඒ මොනව වෙලාද?
ஏ மொனவ வெலாத?
**அம்மா: அது என்ன நடந்தது?**

පුතා: අපි පාපන්දු සෙල්ලම් කරන කොට මාව වැටුණා.
அப்பி பாபந்து செல்லம் கரன கொட்ட மாவ வெட்டுனா.
**மகன்: நாம் கால்பந்து விளையாடும்போது நான் விழுந்துவிட்டேன்.**

අම්මා: තුවාල වුනාද? කෝ බලන්න.
துவால வுணாத? கோ பலன்ன.
**அம்மா: காயம் பட்டுவிட்டதா? எங்கே பார்ப்போம்.**

පුතා: මෙන්න මෙතන අම්මේ.
மென்ன மெதன அம்மே.
**மகன்: இதோ இவ்விடத்தில் அம்மா.**

අම්මා: තුවාල වෙලා නම් නැහැ.
துவால வெலா நம் நெஹெ.
**அம்மா: காயமென்றால் இல்லை.**

: ඇඳුම් මාරු කරගෙන එන්න. මම තෙල් ටිකක් ගාන්නම්.
எந்தும் மாரு கரகென என்ன. மம தெல் டிகக் கான்னம்.
**: உடை மாற்றிக்கொண்டு வாருங்கள். நான் எண்ணெய் தடவுகிறேன்.**

පුතා: අම්මේ! තෙල් ගාන කොට රිදෙනවනේ.
அம்மே! தெல் கான கொட்ட ரிதெனவனே.
**மகன்: அம்மா! எண்ணெய் தடவும்போது வலிக்குமே.**

අම්මා: ටිකක් රිදෙයි. ඉවසගන්න. අඩු වුනේ නැත්නම් ඩොක්ටර් කෙනෙකුට පෙන්වමු.
டிகக் ரிதெய். இவசகன்ன. அடுவுனே நெத்னம் டொக்டர் கெனெகுட்ட பென்வமு.
**அம்மா: கொஞ்சம் வலிக்கும். பொறுத்துக்கொள்ளுங்கள். குறையாவிட்டால் டொக்டரிடம் காட்டுவோம்.**



**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. .......... පිට්ටනියේ වැටුණා.
2. මම .......... ටිකක් ගාන්නම්.
3. ............ කෙනෙකුට පෙන්වමු.




## தன் கூற்று வாக்கியம் - பிறர் கூற்று வாக்கியம்
## Direct speech & Indirect speech

வினா நிலையில் உள்ள வாக்கியங்களை (Interrogative Sentence) தன் கூற்று நிலையில் இருந்து, பிறர் கூற்று வாக்கியங்களாக மாற்றியமைக்கும் முறை பற்றி மேலும் இங்கே பயில்வோம்.

அ) The teacher asked Ragu, "Have you been to India?"
ஆசிரியர் ரகுவிடம் கேட்டார்,
''நீர் இந்தியாவுக்குப் போய் இருந்துள்ளீரா?'' என்று.
(தன் கூற்று வாக்கியம் -Direct speech)

ஆ) The teacher asked Ragu whether he had been to India.
நீர் இந்தியாவுக்குப் போய் இருந்துள்ளீரா என ஆசிரியர் ரகுவிடம் கேட்டார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

**குறிப்பு:** மேற்காணும் (அ) தன் கூற்று ஆங்கில வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள, "Have you been to India?" எனும் வினா வாக்கியம், (ஆ) பிறர் கூற்று ஆங்கில வாக்கியத்தில், "whether he had been to India" என மாற்றம் அடைந்துள்ளதை அவதானிக்கலாம்.

இ) I asked the manager, "Will you be in office tomorrow?"
நான் முகாமையாளரிடம் கேட்டேன்,
''நீங்கள் நாளை அலுவலகத்தில் (பிரசன்னமாகி) இருப்பீர்களா?'' என்று.
(தன் கூற்று வாக்கியம் -Direct speech)

ஈ) I asked the manager whether he would be in office the next day.
நீங்கள் நாளை அலுவலகத்தில் (பிரசன்னமாகி) இருப்பீர்களா என நான் முகாமையாளரைக் கேட்டேன்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

**குறிப்பு:** மேற்படி (இ) தன் கூற்று ஆங்கில வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள, "Will you be in office tomorrow?" எனும் வினா வாக்கியம், (ஈ) பிறர் கூற்று ஆங்கில வாக்கியத்தில், "whether he would be in office the next day" என மாற்றம் அடைந்துள்ளதைக் கவனத்தில்கொள்ள வேண்டும்.

உ) The driver asked me, "Where is the post-office?"
சாரதி என்னிடம் கேட்டார், ''தபால் கந்தோர் எங்கே இருக்கிறது?'' என்று.
(தன் கூற்று வாக்கியம் -Direct speech)

ஊ) The driver asked me where the post-office was.
தபால் கந்தோர் எங்கே இருக்கின்றது என சாரதி என்னைக் கேட்டார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

**குறிப்பு:** மேற்காணும் (உ) தன் கூற்று ஆங்கில வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள, "Where is the post-office?" எனும் வினா வாக்கியம், (ஊ) பிறர் கூற்று ஆங்கில வாக்கியத்தில், "where the post-office was" என மாற்றம் அடைந்துள்ளதை அவதானிக்கலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரவரிசையில் அன்டி முரே முதலிடம்



சர்வதேச டென்னிஸ் தரப்படுத்தல் பட்டியலில் இங்கிலாந்தின் அன்டி முரே முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார். 'பெரிஸ் மாஸ்டர்ஸ்' எனும் டென்னிஸ் போட்டி பெரிஸ் நகரில் நடைபெற்று வருகையில் இதன் அரையிறுதிப் போட்டி கெனடாவின் மிலோஸ் ரோனிக் மற்றும் முரே இருவருக்கு மிடையே நடைபெற விருந்த போதிலும் மிலோஸ் ரோனிக் காயம் காரணமாக இப்போட்டி யிலிருந்து ஒதுங்கினார். இதனால், அன்டி முரே இறுதிப் போட்டிக்கு தெரிவாகியதனால் சர்வதேச டென்னிஸ் தரப்படுத்தல் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றார். இதன்படி, இப்பட்டியலில் முதலாவது இடத்தைப் பிடித்த முதல் இங்கிலாந்து வீரர் என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.




# வருடத்தின் சிறந்த வீரர் பேல்




வேல்ஸ்ஸின் வருடத்தின் சிறந்த கால்பந்தாட்ட வீரராக ரியல் மெட்ரிட் அணியின் கெரத் பேல் தெரிவாகியுள்ளார். கெரத் பேல் இந்த விருதினை பெறும் 6 ஆவது தடவை இதுவாகும்.

27 வயதாகின்ற கெரத் பேல் தனது வேல்ஸ் அணியின் சார்பாக சர்வதேச மட்டத்தில் 64 போட்டிகளில் 25 கோல்களைப் பெற்றவராவார். இதேவேளை, அதிக கோல் பெற்றவர்களில் தன்னை விட முன்னிலையில் இருக்கின்ற ரஷ்ஷின் சாதனையை முறியடிப்பதற்கு பேலுக்கு இன்னும் 4 கோல்களே தேவையாக உள்ளது. அதாவது, ரஷ் பெற்றுள்ள மொத்தக் கோல்கள் 28 ஆகும்.

# இஷாந்த் ஷர்மாவிடம் விக்கெட் வீழ்த்தும் நுணுக்கம் இல்லை

## கபில்தேவ்





'இந்திய கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளர் இஷாந்த் ஷர்மா சிறந்த பந்து வீச்சாளர்தான் ஆனால், அவரிடம் விக்கெட்களை வீழ்த்தும் நுணுக்கம் போதிய அளவில் இல்லை' என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவித்துள்ள அவர், 'இஷாந்த் ஷர்மா விக்கெட்களை வீழ்த்தும் வகையில் பந்து வீசுவதில் முன்னேற்றம் காண வேண்டும். அவர் சிறந்தவொரு பந்துவீச்சாளராக மிளிர வேண்டுமென்றால், சரியான அளவிலும், நேர்த்தியான இடத்திலும் பந்தை வீசவேண்டும். ஒரு ஓவரில் ஆகக் குறைந்தது 5 நல்ல நேர்த்தியான பந்துகளை வீசினால்தான் அதிக விக்கெட்களை கைப்பற்ற முடியும்' என்றும் கபில்தேவ் குறிப்பிட்டுள்ளார்.

# மெட்ரிட் கழகத்தில் தொடரும் ரொனால்டோ




போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ ஸ்பெயின் நாட்டின் ரியல் மெட்ரிட் கழக அணியுடனான ஒப்பந்தத்தை நீடிக்கப் பெற்றுள்ளார்.

இதற்கமைய ரொனால்டோவின் ஒப்பந்தத்தை ரியல் மெட்ரிட் கழகம் மேலும் 5 வருடத்திற்கு நீடித்துள்ளது. இதன்மூலம் ரொனால்டோ பெறப்போகும் ஊதியம் எவ்வளவு தெரியுமா? ஒரு வாரத்திற்கு 6 கோடி ரூபாய்க்கும் அதிகமாகப் பெறுவார் என உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

# பாகிஸ்தானின் பந்து வீச்சு பயிற்றுனர்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரரான அசார் மஹ்முத் பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சுப் பயிற்றுனராக நியமிக்கப்பட்டுள்ளார். இதன்படி, இவரது பயிற்றுவிப்பின் கீழான முதலாவது போட்டியாக அமைவது நொவெம்பர் 17 ஆம் திகதி நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடராகும். அண்மைக்காலங்களில் இங்கிலாந்தின் பிராந்திய கழக அணி போட்டிகளில் அசார் கலந்துகொண்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹோமர் இ

புராதன கிரேக்க காலம் புனைகதைகளால் நிறைந்திருந்தது. அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் புனைகதைகளின்மூலம் தம்மைச் சுற்றி இருக்கும் உலகம் எத்தகையது என்பதைப் புரிந்துகொண்டனர். இக்கதைகள் அனைத்தும் தெய்வங்களையும் மர்மம் நிறைந்த விலங்குகளையும் மையப்படுத்தி அமைந்திருந்தன. புனைகதைகளில் வரும் தெய்வங்களின் வசிப்பிடங்களாக கிரேக்க தீவுகளும் மலைகளும் அமைந்திருந்தன. இந்த புனை கதைகளில் வரலாற்று முக்கியத்துவத்துடன் கூடிய பல பாத்திரங்களும் அவற்றின் வீர சாகசக் கதைகளும் அடங்கியிருந்தன. அவை உண்மையானவற்றையும் கற்பனைக் கதைகளையும் உள்ளடக்கிய பல்கூட்டு இலக்கியமாகவும் விரிவான காவியமாகவும் திகழ்ந்தன. உலக இலக்கியங்கள் குறித்து ஆராயும்போது, கிரேக்க வீரகாவியங்களில் ஹோமர் இயற்றிய 'இலியட்' மற்றும் 'ஒடிசி' என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன.

## ஹோமர்

கிரேக்க இலக்கிய வரலாற்றில் மிகச் சிறந்த புலவராக கருதப்படுபவர் ஹோமர் ஆவார். கிரேக்க மக்கள் தமது முதலாவதும் சிரேஷ்ட புலவராகவும் ஹோமரையே கருதுகின்றனர். இவர் கி.மு.800- கி.மு. 900 வரையிலான காலப்பகுதியில் வாழ்ந்ததாக கருதப்படுகிறது.


ஹோமர் எனும் இந்த மாபெரும் புலவர் அயோனியா என்ற பகுதியிலேயே வாழ்ந்துள்ளார் எனக் கருதப்படுகின்றது. அது ஏஜியன் கடற்கரையோரத்தில் அமைந்திருந்தது. இந்தப் பகுதி அக்காலத்தில் கிரேக்கப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. ஹோமர், கண் பார்வையற்ற ஒரு புலவர் ஆவார். இவர் தனியாகவோ அல்லது ஒரு குழுவினருடன் இணைந்தோ தனது வீர காவியங்களான இலியட் மற்றும் ஒடிசி போன்ற படைப்புகளை உருவாக்குவதில் வெற்றிகண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், ஹோமர் என்று ஒரு புலவர் இருக்கவில்லை என்றும் அவர் ஒரு கற்பனை மனிதர் என்றும் சில கருத்துக்களும் நிலவுகின்றன. எனினும், பெரும்பாலானவர்கள் ஹோமர் உண்மையில் வாழ்ந்த ஒரு புலவர் என்றே கருதுகின்றனர்.



## ஒடிசி

அக்கால கிரேக்கத்தில், தெய்வங்களை மகிழ்ச்சிப் படுத்தியபடி சமாதானமும் அமைதியும் நிறைந்த யதார்த்தபூர்வ வாழ்க்கை வாழ்வதற்கான ஒரு முன்மாதிரியான வழிகாட்டியாக ஹோமரின் வீரகாவியங்கள் திகழ்ந்தன. புராதன கிரேக்கத்தில் புனைகதைகள் கூறும் சம்பிரதாயம் இருந்தது. அவ்வாறு நெடுங்காவியங்களைப் படைப்பவர்கள், மனதில் நிலைத்துநிற்கும் வகையிலேயே அவற்றைப் படைப்பர். கிரேக்க இலக்கியத்தில் பெரும் வரவேற்பைப் பெற்ற ஒடிசி எனும் வீர காவியமானது, ஒடிசியஸ் எனும் கதாபாத்திரத்தை மையப்படுத்தி உருவானதாகும். ட்ரோஜன் யுத்தத்தின் பின்னர் தனது வீடு திரும்ப ஒடிசியஸ் எடுக்கும் பெரும் முயற்சிகள் மற்றும் போராட்டங்கள் குறித்து இக்காவியத்தில் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஒடிசியஸ் என்பவன் பயமற்ற-துணிவுள்ள-பலம் மிகுந்த-திறமை நிறைந்த ஒருவன் என விபரிக்கப்பட்டுள்ளது. இக்காவியம் 12,110 கவிதைகளைக் கொண்டது. ஒவ்வொரு கவிதையும் ஆறு வரிகளைக் கொண்டது. ஹோமர் இயற்றிய மற்றொரு புகழ்பெற்ற காவியமான 'இலியட்' இன் தொடர்ச்சியாகவே ஒடிசி இயற்றப்பட்டதாக ஒரு கருத்தும் நிலவுகின்றது.

ஒடிசி வீரகாவியத்தில் வரும் வீரனான ஒடிசியஸ் கிரேக்க படைவீரன் ஆவான். ட்ரோஜன்களுடன் போர் புரிந்து அவர்களை தோற்கடித்த பின்னர், அவன் தனது தாய்நாடாகிய இத்தாகாவுக்கு பயணிக்கின்றான். இந்தப் பயணத்தின்போது, அவன் பல்வேறு இன்னல்களுக்கு





'ஒடிசியஸ் என்பவன், பெனிலொப் எனும் பெண்ணின் கணவனும் டெலிமாக்கஸ் என்பவனின் தந்தையுமாவான். இவன் ட்ரோஜன் யுத்தத்திற்கு சென்று 10 வருடங்களை யுத்தத்தில் கழித்தான். பின்னர் தனது தாய்நாடு வந்து சேர 10 வருடங்கள் எடுக்கின்றன. ட்ரோஜன் யுத்தம் நிறைவடைந்த பின்னரான 10 வருட கால சம்பவங்கள் பற்றியே ஒடிசி விபரிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்கொடுக்கின்றான். மர்மம் நிறைந்த பிரதேசங்களையும் கடக்க வேண்டி ஏற்படுகின்றது. ஆபத்தான மிருகங்களையும் எதிர்கொள்கின்றான். அவ்வாறான சந்தர்ப்பத்தில் மனிதன் ஒருவன் எதிர்நோக்கும் துணிவு, மனோபலம் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் இக்காவியத்தில் பேசப்படுகின்றது.

இதில் மனிதன் இயற்கை, உலகம் மற்றும் தெய்வங்களுடன் போராடுவது குறித்து விபரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பரந்த வகையிலும் ஆழமான கருத்துக்களுடனும் உலகம் குறித்துப் பேசும் குறைந்தளவிலான இலக்கிய நூல்களே உலகில் உள்ளன. மகா கவிஞர் ஹோமரின் மிகப் பழமை வாய்ந்த இலக்கிய கையெழுத்துப் பிரதி வெனிசில் உள்ள மார்ஷியன் நூலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.



# யற்றிய 'ஒடிசி'

## கிரேக்க வீரகாவியம்



### ஒடிசி சுருக்கமாக...

ஒடிசியஸ் என்பவன், பெனிலொப் எனும் பெண்ணின் கணவனும் டெலிமாக்கஸ் என்பவனின் தந்தையுமாவான். இவன் ட்ரோஜன் யுத்தத்திற்கு சென்று 10 வருடங்களை யுத்தத்தில் கழித்தான். பின்னர் தனது தாய்நாடு வந்து சேர 10 வருடங்கள் எடுக்கின்றன. ட்ரோஜன் யுத்தம் நிறைவடைந்த பின்னரான 10 வருட கால சம்பவங்கள் பற்றியே ஒடிசி விபரிக்கின்றது. அந்தப் பயணத்தின் போது ஒடிசியஸ் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றான்.

ஒடிசியஸ்ஸை மீண்டும் அவனது மனைவி மற்றும் பிள்ளையிடம் அனுப்புவதற்கு எத்தீனா தேவதை தேவ சபையிலுள்ள ஏனைய தெய்வங்களிடம் அனுமதி கோருகிறது. எத்தீனா தேவதையின் கோரிக்கைக்கு ஏனைய தெய்வங்கள் இணங்கின. அதற்கமைய, ஒடிசியஸ் கப்பல் ஒன்றை தயாரித்து அதில் ஏறி பயணத்தை ஆரம்பிக்கின்றான். அந்த கடல் பயணத்தின்போது, அவன் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்கின்றான். பல சிரமங்களைக் கடந்து அவன் இத்தாகாவுக்கு வந்து தனது பிள்ளை மற்றும் மனைவியுடன் இணைகின்றான். இத்தாகாவின் சிம்மாசனம் மீண்டும் ஒடிசியஸ் வசமாகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# இயற்கை எழில் மிக்க மீமுரே கிராமம்

கண்டியில் அமைந்துள்ள லுல்வத்தை சந்தியில் இருந்து பதினைந்து மைல் தூரம் கடந்தால் மீமுரே கிராமத்தை அடையலாம். இங்கு நெல், மிளகு, காய்கறி உள்ளிட்ட பலவகைப் பயிர்ச்செய்கைகள் இடம்பெறுகின்றது. இந்த மீமுரே கிராமத்தைச் சுற்றி கிரிகால பொத்தை, கொம்பாபாதிய, நக்கிள்ஸ், கொபோனில்லகல, தோத்தலுகல, களுபஹன, வமாரப்பு கல, லக்கேகல, லபுபெலெஸ்ஸ பத்தனை, தும்பொனகல, கல்குல ஆகிய மலைத்தொடர்கள் அமைந்துள்ளன. இவை இந்த கிராமத்திற்கு எழில் தருகின்றமையால் அனைவரையும் கவர்ந்துள்ளது.

விஜயனின் வருகைக்கு முன்னர் அசுர கோத்திர ஆதிவாசிகள் இந்த மீமுரே கிராமத்தில் வாழ்ந்ததாக சொல்லப்படுகின்றது. இந்த கிராமத்துடன், தொடர்புடைய வாய்மொழிக் கதைகளோ ஏராளம். மீமுரேயின் தனித்துவத்தைப் பேணுவதிலும் அதன் சிறப்பை பறைசாற்றுவதிலும் 'லகே கல' என அழைக்கப்படும் 'யக்குன்கே கல' முக்கிய இடத்தை வகிக்கின்றது. யக்குன்கே கல என்றால் 'பேய்களின் கல்' என அர்த்தமாகும். இராமாயணத்தில் இராவணன் மயில்மீது ஏறி பயணித்த பாதையை இந்த லக்கேகல அடையாளப்படுத்தப்பட்ட இடமாகத் திகழ்ந்ததாகவும் புத்தபெருமான் மகியங்கனைக்கு முதல் வருகையின்போது, லக்கேகல மலை உச்சியில் தனது பாத அடையாளத்தை பொறித்ததாகவும் மக்கள் நம்புகின்றனர். அத்தோடு, கண்டியை ஆண்ட இறுதி மன்னனான ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் ஆங்கிலேயரிடம் இருந்து தப்பியோடி மறைந்து வாழ்வதற்கு திட்டமிட்ட கிராமமே மீமுரே ஆகும். ஏனெனில், இக்கிராமத்தைச் சுற்றிவர மலைகள் இருப்பதால் ஏனைய கிராமங்களிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு பாதுகாப்பு நிறைந்த இடமாக இது இருந்தமையாலேயே மன்னன் இராஜசிங்கன் இங்கு மறைந்து வாழ்வதற்கு திட்டமிட்டிருந்தார் என வாய்மொழி கதைகள் கூறப்படுகின்றது. மீமுரே கிராமமானது, இன்று சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கி எவ்வாறு இயங்குகின்றது?





**நாம் திரைப்படங்களில் டுமீல்... டுமீல் என்று துப்பாக்கிகள் தொழிற்படுவதை மட்டும்தான் பார்த்துள்ளோம். ஆனால், துப்பாக்கி இயங்குவது எவ்வாறு என்பது பற்றி நாம் அறிந்திருக்க வாய்ப்பு இல்லை. அதனால், இன்று துப்பாக்கியின் இயக்கம் பற்றி ஆராய்வோம்.**

## துப்பாக்கி இயங்கும் விதம்

எடை குறைந்த தோட்டாக்களை துப்பாக்கியில் நிரப்பியதும், துப்பாக்கியில் உள்ள விசையை (Tingger Guard) பின்னோக்கி இழுத்து விடும்போது, அந்த விசையானது, துப்பாக்கியின் தோட்டாக்களுக்கு மாற்றப்படுகின்றது. இவ்வாறு அதி வேகத்துடன் விசையானது, தோட்டாக்களுக்கு இடம் மாறி வரிசையில் முதலில் உள்ள தோட்டா வெளிவருகின்றது. இதுதான் துப்பாக்கியின் இயக்கம்.

**துப்பாக்கியில் உள்ள விசையை பின்னோக்கி இழுத்துவிடும்போது, விசையானது தோட்டாக்களுக்கு இடம் மாறி தோட்டா வெளிவருகின்றது.**

## நடப்பது என்ன?

ஒரு பொருளின் நிறையையும் அதன் திசைவேகத்தையும் பெருக்கினால் உருவாகுவதே உந்தம் (Momentum) ஆகும்.

**உந்தம் (Momentum) = பொருள் நிறை x பொருளின் திசை வேகம்.**



இந்த உந்தமானது, ஒரு பொருளிலிருந்து மற்றப் பொருளுக்கு மாற்றப்படுகின்றது. இரு பொருட்களின் மோதலுக்குப் பின்னர் பொருட்களின் திசைவேகங்கள் மாறுகின்றன. இதன்போது, துப்பாக்கியில் ஓய்வு நிலையில் உள்ள தோட்டாவானது, டிக்கரினால் உருவாகும் விசையின்மூலம் உந்தம் உருவாகி தோட்டாக்களுக்கு மாற்றப்பட்டு, முதல் நிலையில் உள்ள தோட்டா முன்தள்ளப்பட்டு வெளியேறுகின்றது. பின்னர் இறுதித் தோட்டா ஓய்வு நிலைக்கு செல்கின்றது.

இதேவேளை, உந்தம் என்பது மாறாக் கோட்பாட்டினை கொண்டதனால், டிக்கர் (விசை) மூலம் உருவாகும் விசை உந்தமாக மாறி இறுதியான தோட்டா மீதும் உந்தம் மாற்றப்பட்டு இறுதி தோட்டாவும் தோட்டாக்களின் அழுத்தம் மோதல் இன்றி அதுவும் துப்பாக்கியிலிருந்து வெளியேறுகின்றது. இவ்வாறே துப்பாக்கியொன்றின் செயற்பாடு அமைகின்றது.


## வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD



★ 4000 English Letter Writing Software



★ 8 GB Pen Drive



புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ்

போன்றன இலவசமாக வழங்கப்படும்.

02.11.2016 'தூவானம்' கேள்விக்கான விடை: ஒரு லட்சத்து 19 ஆயிரம்
Pendrive வெற்றியாளர்: சு.சாய்சந்தோஷ், 102, நியூ டட்ஸ்பார் வீதி, கல்லடி, மட்டக்களப்பு.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்

அனுப்ப வேண்டிய முகவரி:
Pen Drive போட்டி (16.11.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

இவ்வார கூப்பன்:
16.11.2016
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தெ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கானா

மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள இந்நாடு 1957 ஆம் ஆண்டில் பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரம் பெற்றதோடு, உப சஹாரா வலயத்திடமும் சுதந்திரம் அடைந்தது. 1960 ஆம் ஆண்டளவில் கானா குடியரசாகியது. பல்வேறு இராணுவ சதிப்புரட்சிகள் உள்ளிட்ட பல்வேறு மோதல்களுக்கு மத்தியில் ஆட்சி நடந்தேறிய இந்நாட்டின் நிகழ்காலத்தில் நடைமுறையில் உள்ள அரசியலமைப்பு 1992 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.



இங்கு பல்வேறு இன மக்கள், பூர்வீகமாக வாழ்ந்து வருகின்றனர். 'இவர்களில் ஆகன்கள்' என்பவர்களே முக்கியமானவர்கள்.



பசுமையான மழைக்காடுகள் உள்ளன.




பிரித்தானியரின் ஆட்சியின்போது, கோல்ட் கோஸ்ட் என 'கானா' அழைக்கப்பட்டது.



பாரம்பரிய உடை.



பல ஆறுகள் பாய்ந்தோடுகின்றன. இன்று அவற்றில் பல மாசடைந்துள்ளன.



புராதன கலைப் படைப்புகள் பல பாதுகாக்கப்பட்டுள்ளன.

## தேசிய பறவை




தேசிய பறவை - டவ்னி கழுகு



ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் கொஃபி அனான் கானா இனத்தவராவார்.

## இனங்கள்




## மொழிகள்

அசான்டே 16%, ஃபெண்டே 11.5%, பொரொன் 4.9%, டெகொம்பே 4.4%, டெங்மே 4.2%, டகர்டே 3.9%, கொகொம்பா 3.5%, அகேமே 3.2%, ஏனையோர் 3.2%

## சமயம்

கிறிஸ்தவம் 71.2%, இஸ்லாம் 17.6%, ஏனையோர் 0.8%, சமயமற்றோர் 5.2%

## அரசியல்



கானாவின் நாடாளுமன்றம்



ஜனாதிபதி ஜோன் ட்ராமின் மஹமா

## கானாவின் இயற்கை வளம்

தங்கம், வெள்ளி, வைரம், பொக்சைட், மசகு எண்ணெய் குறித்த ஆய்வுகள் நடைபெறுகின்றன.




## தலைநகரம்






உலகின் இரண்டாவது மிகப்பெரிய முதல் தரமான கொக்கோ உற்பத்தி நாடு.

பாம் எண்ணெய் உற்பத்தி இங்கு முக்கிய கைத் தொழில்.



தங்கச் சுரங்க தொழிலாளர்கள்.



மட்பாண்ட கைத்தொழில் நடைபெறுகின்றது.



கத்தோலிக்க தேவாலயம்.



இஸ்லாமிய பள்ளிவாசல்



சுற்றுலாத் துறைக்கான கவரும் பல வனங்கள் உள்ளன.



மீன்பிடிக் கைத்தொழில் மேற்கொள்ளப் படுகின்றது.



உணவிற்காக கால்நடைகள் வளர்க்கப் படுகின்றன.



பாரம்பரியதோர் நடனம்.



விவசாயம் முக்கிய வாழ்வாதாரம்.



தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துகின்றனர்.

# மூளைக்கு வேலை



## விடைகள்

**1** விமானம் போய்ச் சேர்வதற்கும், திரும்ப வருவதற்கும் ஒரே அளவு நேரம் செலவாகியுள்ளது. இதில் குழப்பம் ஏதுமில்லை. ஏனென்றால், 80 நிமிடங்களும் 1 மணி 20 நிமிடங்களும் ஒரே நேர அளவு ஆகும். இரண்டுக்கும் வித்தியாசம் இருப்பதாகவும், 80 நிமிடங்கள் குறைவாக இருப்பது போலவும் தோன்றுவதற்குக் காரணம், அதை நாம் எழுதும் முறையில் இருக்கிறது.



**2** அப்பாக்களில் ஒருவர், மற்றொருவரின் மகன் என்பதுதான் இதில் உள்ள ரகசியம். இங்கே சொல்லப்பட்டிருப்பது தாத்தா, அப்பா, மகன் ஆகிய மூன்று பேரைப் பற்றி மட்டுமே. ஆகவே, தன் மகனுக்கு 150 ரூபாய் கொடுக்கிறார். அதிலிருந்து அப்பா (தாத்தாவின் மகன்), மகனுக்கு (தாத்தாவின் பேரனுக்கு) 100 ரூபாயை கொடுத்திருக்கிறார். எனவே, மொத்தமாக 150 ரூபாய்தான் இருக்கும்.

**3** ஒரே மாதிரியான ஐந்து இலக்கங்களைக் கொண்டு 100யை எழுதுவது சுலபம்தான். 1 களையும், 3 களையும் கொண்டு எழுதலாம். 5களைக் கொண்டு எழுதுவது மிகச் சுலபமான வழி. இங்கு நான்கு வழிகள் வருமாறு;


101 -1 = 100
(33x3) + (3/3) = 100
(5x5x5) - (5x5) = 100
(5 + 5 + 5 + 5)x 5 = 100



**4** கடிகாரத்தில் உள்ள எல்லா எண்களின் கூட்டுத் தொகை 78. ஆகவே, ஆறு துண்டுகளில் ஒவ்வொன்றிலும் எண்களின் கூட்டுத் தொகை பெறுவதற்கு, 78/6 = 13 இதன் அடிப்படையில் 12+1, 11+2, 10+3, 9+4, 8+5, 7+6 எனப் பிரிக்கலாம்.



**5**




# பெப்ரவரியின் சிறப்பு

February 2017


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | | | | | |

எதிர்வரும் 2017 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்திற்கு மனி பேக் (Money Bag) என சீன வாஸ்து முறையில் பெயர் சூட்டியுள்ளார்கள். ஏனெனில் இம்மாதத்தில் வருகின்ற ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய அனைத்து தினங்களும் நான்கு தினங்களைக் கொண்டுள்ளது. இவ்வாறான அபூர்வமான ஆண்டு 823 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் உருவாகும் என சீன வாஸ்து மேலும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation

## உலகில் பிரபல்யமானவர்கள்

# றொபேட் ஜேம்ஸ் பொபி பிஷர்



**1972** ஆம் ஆண்டளவில் அமெரிக்காவில் நடைபெற்ற உலக சதுரங்க போட்டியில் உலக சதுரங்க வீரராக வெற்றிபெற்ற முதலாவது அமெரிக்க வீரர் இவராவார். இவர் 1943 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி பிறந்தார்.

1975 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலக சதுரங்கப் போட்டியில் இவரால் ஆலோசிக்கப்பட்ட சில நிபந்தனைகளை பன்னாட்டு சதுரங்கக் கூட்டமைப்பு ஏற்க மறுத்ததால், றொபேட் ஜேம்ஸ் பொபி பிஷர் போட்டியில் கலந்துகொள்ள மறுத்துவிட்டார். அதனால், அவருக்கு வழங்கப்பட்ட உலக சதுரங்க வீரர் எனும் பட்டத்தை பன்னாட்டு சதுரங்கக் கூட்டமைப்பு மீளப் பெற்றுக்கொண்டது.

அதன் பின்னர் அன்றைய காலகட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையால் தடைவிதிக்கப்பட்ட யூகோஸ்லாவியாவில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் பொபி பிஷர் 1992 ஆம் ஆண்டில் கலந்துகொண்டமையால், ஐக்கிய அமெரிக்காவினுள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படாததால் யூகோஸ்லாவியாவிலேயே தங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அதனை தொடர்ந்து, ஹங்கேரியில் வாழ்ந்த இவர் ஜப்பான் சென்றபோது, இவருடைய காலாவதியான கடவுச்சீட்டுக்காக, சில காலம் சிறைத் தண்டனையை அனுபவித்தார். 2005 ஆம் ஆண்டளவில் விடுதலை பெற்ற இவருக்கு ஐஸ்லாந்து அரசாங்கம் குடியுரிமை வழங்கியது. சில காலம் ஐஸ்லாந்தில் வாழ்ந்த பொபி பிஷர் 2008 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் 17 ஆம் திகதி காலமானார்.

தொகுப்பு:
ஜுனைட் எம்.பஹ்றத்

# சீதாவாக்கை இராசதானி

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பவன் சைவசமயத்தினை பின்பற்றியதால் மன்னனும் சைவசமயத்தை தழுவி பௌத்த மதத்திற்கு எதிராகச் செயற்பட்டான். அதனால், மன்னனுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்தனர். குறிப்பாக, கண்டி இராச்சியத்திற்கு யமசிங்கனை மன்னனாக ஏற்றுக்கொள்ள கண்டி மக்கள் முடிவு செய்தனர். அவ்வேளை, யமசிங்கன் கிறிஸ்தவனாகி டொன்பிலிப் என்ற பெயருடன் மன்னாரில் இருந்தான். அதேவேளை, தொன்சுவான் என்ற பெயரைப் பெற்ற கோனப்பு பண்டார எனும் முதலாம் விமலதர்ம சூரியனின் தலைமையில் யமசிங்கனின் பெருஞ்சேனையுடன் இணைந்து 'வல்லனை' என்ற இடத்தில் 1 ஆம் இராசசிங்கனின் சேனையை தோற்கடித்தான். இதனால், கண்டி இராச்சியத்தை இழந்த இராசசிங்கன் 1593 ஆம் ஆண்டில் மரணமடைந்தான்.

முதலாம் இராசசிங்கனுக்கு பிள்ளைகள் இல்லாமை அரசுரிமை குறித்து சிக்கல் நிலையைத் தோற்றுவித்தது. அத்தோடு, போர்த்துக்கேயருக்கு எதிராக அடிக்கடி யுத்தத்தில் ஈடுபட்டமை, அவனது இறுதிக்காலத்தில் அவன் மேற்கொண்ட பௌத்த எதிர்ப்புக் கொள்கை, கண்டியைக் கைப்பற்ற உதவிய வீரசுந்தர பண்டாரவைக் கொலை செய்தமையால் கண்டிய மக்களின் எதிர்ப்பு, அத்தோடு, சீதாவாக்கை இராசதானியிடம் தேவையான கடற்படை வலிமை இன்மை போன்ற காரணங்களால் சீதாவாக்கை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது.

அதன்பின்னர், பலம்பெற்ற போர்த்துக்கேயர், கோட்டை, றைகம இராச்சியங்களையும் கடுவெல, மல்வானை உள்ளிட்ட சீதாவாக்கையின் பெரும்பகுதியையும் தமது ஆட்சியின்கீழ் கொண்டுவந்தனர். சீதாவாக்கையின் ஏனைய பகுதிகள் கண்டி இராச்சியத்துடன் இணைக்கப்பட்டதால் சீதாவாக்கை இராச்சியம் முற்றாக மறைந்தது.

- இரஞ்ஜித் ஜெயகர்

# தெரிந்து கொள்வோம்

★ இலங்கை நாடாளுமன்றத்தின் தலைவர் யார்?

கரு ஜயசூரிய





★ தேசிய அபாய போதைப் பொருள் கட்டுப்பாட்டு சபையின் வர்த்தகக் குறியீட்டு தூதுவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவர் யார்? அவர் எத்துறையில் புகழ்பெற்றவர்?

குமார் சங்கக்கார - கிரிக்கெட்

★ இலங்கையில் 15 ஆவது நாடாளுமன்ற தேர்தலில் ஆகக் குறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்வுசெய்யப்பட்ட மாவட்டம் எது?



திருகோணமலை மாவட்டம் (4 பேர்)



★ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எந்த மாநிலத்தில் முதல் அமைச்சராக கடமையாற்றினார்?

குஜாரத் மாநிலம்


★ இவ்வாண்டு (2016) அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் யார்?



ஜனநாயகக் கட்சி - ஹிலரி கிளிங்டன்
குடியரசுக் கட்சி - டொனால்ட் டிரம்ப்

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

# ஆழ்கடலில் வாழும் அபூர்வமான மீனினம்



## சவப்பெட்டி மீன்



அவுஸ்திரேலியா நாட்டின் கிழக்கு கடற்கரை, தென்மேற்கு பசிபிக் ஆகிய ஆழ்கடல் சேற்றுப்பகுதிகளில் இந்த மீனினத்தைக் காணலாம். இவை கடல் தேரைக் குடும்பத்தைச் சேர்ந்தவை என கடலாராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்த சவப்பெட்டி மீன்களை இதன் எதிரி உயிரினங்கள் தாக்க வந்தால், உடனேயே இவை அதிகளவு நீரைக் குடித்து உடலைப் பெரிதாக்கும்; அதனால் எதிரி உயிரினங்கள் தாக்க முடியாது பின்வாங்கும் நிலை ஏற்படும். இவ்வாறே, இந்த சவப்பெட்டிமீன்கள் தம்மை தற்காத்துக் கொள்கின்றன. இதன் உடலில் சிறிய கால்கள் போலத் தோற்றமளிக்கும் துடுப்புகள் உள்ளன. அதனால் இவை கடலடியில் நடந்து செல்வது போல தோற்றமளிக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாயைத் திறந்துகொண்டே பறக்கும் பறவை





ஒவ்வோர் உயிரினமும் தனக்குத் தேவையான இரையைத் தேடிக்கொள்வதற்கு வித்தியாசமான வழிகளைப் பின்பற்றுகின்றது. இது இயற்கையிலேயே பெற்றுள்ள இயல்புகளில் ஒன்றாகும். அந்தவகையில், வாயைத்திறந்து கொண்டே பறந்து தம் இரையைப் பிடித்துக்கொள்ளும் பறவையினம்தான் 'பக்கி' (Nightjar) ஆகும்.

'பக்கி' பறவைகள் பகல் பொழுதில் உறக்கம் கொண்டு இரவு வேளையிலேயே வெளியில் தலைகாட்டுகின்றன. இரவில் பறந்து திரியும்போது, அவை தமது வாயைத் திறந்துகொள்ளும். பறக்கும்போது எதிர்ப்படும் பூச்சிகளைப் பிடித்துக்கொள்ளவே அவை இவ்வாறு செய்கின்றன.

# மாதுளை தரும் ஆரோக்கியம்






நம் உடலுக்குத் தேவையான சத்துக்களைக் கொண்டுள்ள ஒரு பழவகைதான் மாதுளை. மாதுளம்பழம் உடலில் இரத்தத்தை உற்பத்தி செய்வதோடு, இரத்த ஓட்டத்தையும் சீராக்குகின்றது. மருந்தாகவும் பயன்படுகின்றது. எமது உடலுக்குத் தேவையான A, B, D, E ஆகிய விற்றமின்கள் மாதுளம் பழத்தில் அதிகம் உள்ளன.


எமது உணவு செரிமானத்திற்குத் தேவையான நார்ச்சத்துக்களும் இதில் அடங்கியுள்ளன.

வயிற்றுப்போக்கைக் கட்டுப்படுத்தல், வயிற்றுப் புண் மற்றும் வாய்ப்புண்களை குணமாக்கவும் மாதுளம்பழம் சாப்பிடலாம். மாதுளை சாப்பிட்டு வந்தால் இதயம் சம்பந்தமான நோய்கள், புற்று நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக் குறைவாகும். உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவும் உடல் சோம்பலைப் போக்கி சுறுசுறுப்பை அதிகரிக்கவும் மாதுளை உதவுகின்றது. எமது உடலில் அனைத்து உறுப்புகளின் இயக்கத்திற்கும் மாதுளம்பழம் சிறந்ததாகும். மாதுளம்பழத்தைத் தவிர; அதன் பூ, இலை, பட்டை, விதை, வேர் போன்ற பாகங்களும்கூட மருத்துவக் குணம் கொண்டவை யாகும்.

# மரியானா ஆழி

உலகின் மிக ஆழமான இடம் 'மரியானா ஆழி' (Mariana Trench) ஆகும். இப்பகுதி பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ளது. வடக்கு பசுபிக் சமுத்திர வலயத்தில் அமைந்துள்ள மரியானா தீவுகளை அண்மித்து அமைந்துள்ளதனாலேயே, இது 'மரியானா ஆழி' என்ற பெயரைப் பெற்றுள்ளது.






*1872* தொடக்கம் *1876* வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற செலஞ்ஜர் ஆய்வுப் பயணத்தின்போதே மரியானா ஆழியின் ஆழம் முதன்முதலில் கணக்கிடப்பட்டது. அதன் பின்னர் பல்வேறு காலகட்டங்களிலும் அதன் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. மரியானா ஆழியின் தென் முனைப் பகுதியே மிகவும் ஆழமான பகுதியாகும். 'செலஞ்ஜர் டீப்' எனப்படுகின்ற இப்பகுதி சுமார் 10,994 மீற்றர் (36,070 அடி) ஆழம்கொண்டதாக கூறப்படுகின்றது.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, நொவெம்பர் 16 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 16, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org